CC 100/2017

17.11.2023

அ.சா.3,

பெயர்: குமாரசாமி

த/பெ. ரங்கசாமி

Accused Present.

**முதல்விசாரணை தொடர்ச்சி:**

முதல் விசாரணையில் லீலாவதி சமையல் கட்டில் இருந்து ஒரு கத்தி எடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் தற்போது என்முன் காட்டப்படும் கத்திதான் அந்த கத்தியாகும். அது **சாபொ 1** ஆகும். எதிரி தரப்பு வழக்கறிஞர் படிவம் 91 ல் 18 இன்ச் கத்தி என குறிப்பிட்டுவிட்டு தற்போது அதற்கு குறைவான கத்தியை காட்டுகிறார்கள் என ஆட்சேபனை செய்கிறார் அவரது ஆட்பேணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவ இடம் சேரன் காலனி என்றால் சரிதான், அதிலிருந்து சுமார் 4 கி.மீ தூரத்தில் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனக்கு புகார்தாரர் போன் செய்தார்கள் அதன்பின் சம்பவ இடம் சென்றேன் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறுகூறவில்லை என்றால்சரியல்ல,

நான் சம்பவ இடத்திற்கு 27 ம் தேதி இரவு 10 மணிக்கு மேல் சென்றேன் அங்கு யாரும் இல்லை பின்பு 28 ம் தேதி சுமார் 11 மணி அளவில் சென்றேன். நான் போகும்போது போலிசார் அங்கு இல்லை, போன பின்புதான் வந்தார்கள். பக்கத்து வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டிருந்தேன். போலிசார் வந்த போது லீலாதேவி ,அவரது சகோதரர் யாரும் இல்லை என்றால் சரியல்ல, அவர்களும் 11.30 மணிக்கு வந்தார்கள்.

வழக்கு சம்மந்தமாக விசாரணைக்காக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சரிதான்., போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல நான் வீட்டில் வைத்து தான் கையொப்பம் இட்டேன் போலிசார் சம்பவ இடத்தில் பார்வை மகசர் , மாதிரி வரைபடம்தயார் செய்தார்கள்., வீட்டில் தான் என்னை விசாரித்தார்கள், காவல் நிலையத்தில் என்னை விசாரிக்கவில்லை.

நான் கையொப்பம் இட்ட பேப்பரிகளில் என்ன எழுதி உள்ளது என எனக்குதெரியாது என்றால் சரிதான், நான் அதனை படித்துப்பார்க்கவில்லை. நான்அடையாளம் காட்டிய கத்தியைதான் போலிசார் என் முன்னால் எடுத்தார்கள் என்றால் சரிதான். நான் அடையாளம் காட்டிய கத்தி 6 இன்ச் இருக்கும் என்றால் நான் அளந்து பார்க்கவில்லை கத்தியின்நீளம் அரை அடி இருக்கும்.

கைப்பற்றப்பட்ட கத்தியில் இரத்தக் கறை இருந்தது வறண்டுவிட்டது. தற்போது நீதிமன்றத்தில் காட்டிய கத்தியில் வறண்ட இரத்தக் கறை இல்லை என்றால் சரிதான். கத்தியை எங்கு இருந்து எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல போலிசார் வீட்டினுள் இருந்து என்முன்னால் தான்எடுத்தார்கள்.

வழக்குச் சம்பவத்தில் பயன்படுத்திய கத்திதான் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் வீட்டினுள் இருந்து எடுக்கும் போது தான் பார்த்தேன். கத்தியை போலிசார் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கின் சான்று பொருளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல, சம்பவ இடத்திற்கு பக்கத்தில் குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான், போலிசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்யும் போது பக்கத்து வீட்டுக்காரர் யாரும் வேடிக்கை பார்க்கவில்லை, பக்கத்துவீட்டுக்காரர் என் உடன் பேசிவிட்டு சென்றுவிட்டார்.

புகார்தாரர் எனது அக்கா மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.